M MADURAI DISTRICT

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2017

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் [ | | | | | ]

நேரம்: 2.30 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **20×1=20**

1) வணிகம் ............ கிளையே.
அ) வியாபாரம் ஆ) வங்கிப்பணி இ) தொழில்துறை ஈ) பொருளாதாரத்தின்

2) ஈ வணிகம் என்பது ............ எனக் குறிக்கப்படும்.
அ) இணையம் ஆ) வங்கிப்பணி இ) மின்னணு வணிகம் ஈ) வர்த்தகம்

3) உற்பத்தியாளர்க்கும் நுகர்வோர்க்கும் இடையில் இருந்து வணிக வளர்ச்சிக்கு உதவுபவர் ............
அ) வியாபாரிகள் ஆ) இடைநிலையர்கள் இ) முகவர்கள் ஈ) ஏலதாரர்

4) குறைந்த விலையுள்ள பொருள்களை தலையில் வைத்தும், தள்ளுவண்டியில் வைத்தும் வியாபாரம் செய்வோரை ............ என அழைப்பர்.
அ) சில்லறை வியாபாரிகள் ஆ) முகவர்கள்
இ) தெருக்கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

5) அழுகிக்கெடும் பொருட்கள் ............டம் அதிக இருப்பு இருக்காது.
அ) நுகர்வோர் ஆ) நடுத்தர வர்க்கத்தார் இ) நெடுங்காலம் ஈ) பருவக்காலம்

6) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஈட்டும் இலாபம் முழுவதும் பங்குதாரர்களுக்கு ............ ஆக வழங்கப்படுவதில்லை.
அ) பங்குகள் ஆ) முனைமம் இ) மேலூதியம் ஈ) பங்காதாயம்

7) ............ம் ஆண்டில், இராக்குடேல் முன்னோடிகள் நேர்மைச்சங்கம் என்ற அமைப்பை நெசவாளிகள் உருவாக்கினர்.
அ) 1844 ஆ) 1484 இ) 1848 இ) 1944

8) குறைபாடுள்ள, இயலாதவர்கள் மற்றும் வயது முதிர்வுள்ள நபர்களுக்கு இந்த சேவை வாணிகம் உதவுகிறது.
அ) மின்னணு வாணிகம் ஆ) தவணை முறை விற்பனை
இ) தொலைத்தொடர்பு வழி வணிகம் ஈ) மடங்குக்கடை

9) இறக்குமதியாளரிடமிருந்து பணம் பெறும் முறை
அ) மாற்றுமுறை ஆவணங்கள் பெறுதல் ஆ) மாற்றுமுறை ஆவணத்தை வட்டம் செய்தல்
இ) கடன் கடிதம் பெறுதல் ஈ) அயல்நாட்டு பணவிடை பெறுதல்
உ) மேற்கூறிய அனைத்தும்

10) ............ என்பது கப்பல் நிறுவனத்தால், கப்பல் மீது சரக்குகளைப் பெற்றுக் கொண்டதற்கான ஒரு ஒப்புகை ஆவணமாகும்.
அ) சரக்கு தேவைக் குறிப்பீடு ஆ) கப்பல் இரசீது
இ) கப்பல் தலைவரின் உதவியாளரால் வழங்கப்படும் ரசீது ஈ) கடன் கடிதம்

11) இந்தியாவில் முதல் இரயில்வே தொடர்பு எந்த இரு நகரங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டது?
அ) மும்பை - சென்னை ஆ) சென்னை - கொல்கத்தா
இ) மும்பை - தேனா ஈ) டெல்லி - சென்னை

12) வான்வழி அனுப்பீட்டு இரசீது ............ பகுதிகளாக தயாரிக்கப்படுகிறது.
அ) 2 ஆ) 3 இ) 5 ஈ) 4

13) பண்டக காப்பக பத்திரங்களின் பெயர்
அ) பண்டக பொறுப்பாளர் ரசீது ஆ) பண்டக காப்பாளர் பற்றுவிடுப்பு
இ) வழங்கல் ஆணை ஈ) துறைமுக காப்பிட ரசீது

14) ............ஐ சான்றுப்பத்திரமாகக் கொடுத்து வங்கிகளில் நிதி உதவி பெற முடியும்.
அ) வழங்கல் ஆணை ஆ) துறைமுக சான்றாணை
இ) பண்டகசாலை சான்றாணை ஈ) பிணைய காப்பு

15) வங்கியர் இதை உற்பத்திச் செய்பவர் எனவும் கூறலாம்.
அ) பணம் ஆ) கடன் இ) வைப்பு ஈ) மேல்வரைப்பற்று

16) ............ வங்கி அரசின் வங்கியராகவும், முகவராகவும் செயல்படுகிறது.
அ) இந்தியன் வங்கி ஆ) ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி இ) இந்திய ரிசர்வ் வங்கி ஈ) கனரா வங்கி

17) ............ இந்திய மத்திய வங்கியின் இரண்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ளன.
அ) இணைய வங்கி ஆ) அட்டவணை வங்கி
இ) தொழில் வங்கி ஈ) அந்நிய செலாவணி வங்கி

18) மருத்துவக் காப்பீடு திட்டம் -ன்படி, அதிகபட்ச பயன் எவ்வளவு?
அ) 10,000 ஆ) 1,50,000 இ) 1,00,000 ஈ) 3,00,000

19) நாம் ஆயுள்திட்ட ஆவணங்களை ............ என்றழைப்பதே சரியானதாகும்.
அ) காப்பீடு ஆ) குறிப்பிட்ட வயது திட்டாவணம்
இ) ஆயுள் காப்பீட்டுறுதி ஈ) பொறுப்பு காப்பீடு

20) எந்த ஆண்டு குழந்தைகள் பணம் திரும்பத் திட்டாவணம் அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1986 ஆ) 1988 இ) 1989 ஈ) 1995

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: 7×2=14**
**அவற்றில் வினா எண் 21ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) வணிகததை வரையறுக்க.
22) ஈ வணிகம் என்பது யாது?
23) வியாபாரத்தை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?
24) அஞ்சல்வழி வாணிகம் என்றால் என்ன?
25) இணையம் என்றால் என்ன?
26) மறுஏற்றுமதி வணிகம் ஏன்றால் என்ன?
27) போக்குவரத்து - வரைவிலக்கணம் தருக.
28) பண்டக காப்பகத்தின் தேவையை விளக்குக.
29) நாட்டுப்புற வங்கியர் என்பவர் யார்?
30) காப்பீடு எடுப்பதற்கான தேவைகள் என்ன?

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: 7×3=21**
**அவற்றில் வினா எண் 31ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) இடையீட்டாளருக்கும், தரகர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? '(ஏதேனும் 3)
32) பண்டமாற்று முறையில் உள்ள 3 இடையூறுகளை கூறுக.
33) மின்னணு வாணிகத்தின் மூன்று குறைபாடுகள் யாவை?
34) உள்நாட்டு வணிகத்திற்கும், வெளிநாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 3)
35) போக்குவரத்தின் பொருளாதார பயன்பாடுகள் ஏதேனும் 3ஐ எடுத்துரைக்க.
36) பன்னாட்டு வணிகத்தின் மூன்று நன்மைகளை கூறுக.
37) பல்வேறு வகையான பண்டககாப்பு ஆவணங்களைக் கூறுக.
38) காசோலையின் தன்மைகளை கூறுக. (ஏதேனும் 3)
39) தானியங்கி பணம் வழங்கும் கருவியின் பயன்களை கூறுக. (ஏதேனும் 3)
40) ஆயுள் காப்பீட்டு திட்ட ஆவணங்களின் வகைகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35**

41) அ) வணிகத்தின் தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன? (ஏதேனும் 5)
**(அல்லது)**
ஆ) மைய வங்கியின் 5 பணிகளை விளக்குக.

42) அ) சரியான வழங்கல் வழிமுறைகளை தேர்ந்தெடுப்பதில் பின்பற்றப்பட வேண்டிய காரணிகள் பற்றி சுருக்கமாக கூறுக. **(அல்லது)**
ஆ) வாடிக்கையாளர் தந்த காசோலைக்கு வங்கியர் பணம் தர மறுப்பதற்கான காரணங்கள் ஏதேனும் 5ஐ குறிப்பிடுக.

43) அ) துறைவாரிப் பண்டகச் சாலைகளுக்கும், மடங்குக் கடைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 5ஐ கூறுக. **(அல்லது)**
ஆ) இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் 5ஐ கூறுக.

44) அ) இறக்குமதி வணிக முறையை சுருக்கமாக கூறுக. **(அல்லது)**
ஆ) காப்பீட்டின் தத்துவங்களை விரிவாக கூறுக. (ஏதேனும் 5)

45) அ) வான்வழி போக்குவரத்தின் ஏதேனும் 5 நன்மைகளை கூறுக. **(அல்லது)**
ஆ) மொத்த வியாபாரிகளின் நடைமுறைப் பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

46) அ) வணிகத்தின் உட்பிரிவுகள் யாவை? **(அல்லது)**
ஆ) உலக வணிக அமைப்பின் ஏதேனும் 5 நன்மைகளை கூறுக.

47) அ) பல்வேறு வகையான பண்டக காப்பகங்களை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) அஞ்சல்வழி வாணிகத்தின் சிறப்புக் கூறுகள் யாவை? (ஏதேனும் 5)

---------